Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 25 of 2025

## Deposition of P.W.8 witness for Prosecution

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **திரு. கரிகாலன்** | Caste | : | |
| Father's/ Husband's Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of July 2025.

(Accused A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது திருச்செங்கோடு தீயணைப்பு நிலையத்தில் நிலைய அலுவலராக பணிபுரிகிறேன். 27.07.2024ம் தேதி காலை 11.50 மணிக்கு நான் அலுவலில் இருந்த போது வீரக்குட்டையை சேர்ந்த தங்கவேல் என்பவர் நிலைய எண்ணிற்கு போன் செய்து ஆலங்காட்டு தோட்டத்தில் தனது கரும்பு காட்டில் தீப்பிடித்துவிட்டதாக தகவல் சொன்னார். அதன்பேரில் நாங்கள் குழுவுடன் சம்பவ இடத்திற்கு மதியம் 12 மணிக்கு சென்றோம். அப்போது கரும்பு காடும், தென்னங்கன்றுகளும் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. அந்த தீயை அணைத்தோம். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 25 of 2025**

**Deposition of P.W.9 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சின்னதுரை | Caste | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of July 2025.

(Accused A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது தோட்டக்கலை உதவி இயக்குனராக பரமத்தி வட்டாரத்தில் பணிபுரிகிறேன். நான் 2024ம் வருடம் கபிலர்மலை வட்டத்தில் தோட்ட கலை உதவு இயக்குனராக பணிபுரிந்து வந்தேன். 09.08.2024ம் தேதி நல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிததத்தின் படி 12.08.2024 அன்று நான் குப்புரிக்காபாளையம் கிராமத்தில் உள்ள தங்கவேல் த/பெ செங்கோடகவுண்டர் மற்றும் அவரது மனைவி சுப்பாயி ஆகியோருக்கு சொந்தமான நிலங்களில் தீயால் எரிந்து போன கரும்பு பயிர் மற்றும் தென்னங்கன்றுகளை கள ஆய்வு செய்து சேத மதிப்பு சான்றிதழ் தயார் செய்தேன். தங்கவேலுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.11/1பி3-ல் உள்ள எரிந்து போன 180 தென்னங்கன்றுகளின் தோராய மதிப்பு ரூ.1,11,600/- என்றும், சுப்பாயிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.62/1பி ல் உள்ள எரிந்து போன 40 தென்னங்கன்றுகளின் தோராய மதிப்பு ரூ.22,800/- என்றும், மதிப்பீடு செய்து 13.08.2024ம் அறிக்கை வழங்கினேன். நான் வழங்கிய அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

### Sessions Case No. 25 of 2025

### Deposition of P.W.10 witness for Prosecution

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | **திரு. பிரவீன்** | Caste | : |
| Father's/ Husband's Name | : | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of July 2025.

(Accused A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது ராமாபுரத்தில் குடியிருக்கிறேன். நான் கோனேரிப்பட்டி அண்ணா சாலையில் ஸ்ரீ அம்மன் டிரேடர் என்ற பெயரில் சொட்டு நீர் பாசன பைப்புகள் விற்கும் தொழில் செய்து வருகிறேன். சாட்சி தங்கவேலுவை எனக்கு தெரியும். மேற்படி தங்கவேலு மற்றும் அவரது மனைவி பெயரில் வீரக்குட்டை கிராமத்தில் உள்ள 3 ஏக்கர் 20 செணட்டில் கரும்பு பயிர் மற்றும் தென்னங்கன்றுகளுக்கு சொட்டு நீர் பைப்புகளை போட்டு கொடுத்தோம். 12.08.2024ம் தேதி நல்லூர் காவல் ஆய்வாளர் நாங்கள் சொட்டு நீர் அமைப்பு போட்டு கொடுத்த தங்கவேலு மற்றும் சுப்பாயி கரும்பு காட்டில் தீப்பிடித்து சொட்டு நீர் பைப்புகள் எரிந்து நாசமாகிவிட்டது என்றும், அதை பார்வையிட்டு அதன் சேதார மதிப்பீட்டு அறிக்கை வழங்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அதன்படி 13.08.2024ல் நான் மேற்படி கரும்பு காட்டிற்கு சென்று ஆய்வு செய்தேன். மேற்படி காட்டில் சொட்டு நீர் பைப்புகள், கன்ட்ரோல் வால்வுகள், பிவிவி பைப்கள், டெமிடிங் பைப்புகள் ஆகியவை எரிந்து சேதாரமாகியிருந்தது. கரும்பு பயிருக்கு போட்ட சொட்டு நீர் பாசன அமைப்புகளின் சேத மதிப்பு ரூ.2,23,691/- என்றும்,

தென்னங்கன்றுகளுக்கு போட்ட சொட்டு நீர் பாசன அமைப்பின் சேத மதிப்பு ரூ.55,440/- என்றும் மதிப்பீடு செய்து தனித்தனியாக சேதார மதிப்பு சான்று வழங்கினேன். மேற்படி சான்றுகள் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆகும். இது சம்பந்தமாக நல்லூர் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : இல்லை.